புலிகள் தீரம் மாங்குளம் ராணுவம் தினறல்

பக்கங்கள் நான்கு விலை ரூபா:- 3-00

முரசொலி

முரசு 04 ஒலி 156 வியாழன் 19-07-1990 (ஆடி 03) துல்ஹஜ் 25

15 இராணுவம் பலி

மாங்குளம் இராணுவமுகாமில் இருந்து வெளியேற முயன்ற இராணுவத்தினர் மீது விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டதையடுத்து 15 இராணுவத்தினர் பலியாகியுள்ளதாக விடுதலைப் புலிகளின் செய்திக்குறிப்பு தெரிவிக்கின்றது. இத்தாக்குதல் நேற்றுமுன்தினம் காலை 9 மணியிலிருந்து 6 மணிவரை இடம் பெற்றது.இத்தாக்குதலில் இராணுவத்தினரிடம் இருந்து பெருமளவு ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அச்செய்திக்குறிப்பு தெரிவிக்கின்றது. நந்தன், குணம், பிரனன், கபில் ஆகிய நான்கு விடுதலைப் புலிகள் இத்தாக்குதலில் வீரமரணமடைந்துள்ளார்கள். இவர்களுக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தை — 4 ஆம் பக்கம் பார்க்க

ஈழத்தமிழரின் சஞ்சலமறிய இந்தியக் குழு வருகின்றது!

இலங்கையில் தற்போது நிகழ்ந்து வரும் இனப்படுகொலைகளை நேரில் கண்டறிந்து,உண்மை நிலை புரிந்திட இந்திய உயர் மட்டக் குழு ஒன்று இங்கு வரவுள்ளது. இத்தகவலை நேற்று இரவு புதுடில்லி வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கையின் வடக்குக் கிழக்குப்பகுதிகளில்நிகழ்ந்து வரும் நிலை தொடர்பான அரசின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தும் வகையில் சபாநாயகர் அல்ஹாஜ் எம்.எச்.மொஹமத் தலைமையிலான குழு ஒன்று புதுடில்லி சென்றிருந்தது.

இக்குழு தம் நியாயத்தை இந்திய அரசின் தலைமைப் பீடத்திடம் ஜனாதிபதி திரு.பிரேமதாஸாவின் அனுசரணைகொண்டு வெளிப்படுத்த முனைந்தது.

ஆயினும் இத்தருணத்தில் சில மத்திய அமைச்சர்களுடன் கலந்துகொண்ட மத்திய அமைச்சரவைக் குழு இலங்கையில் அப்பாவித்தமிழர் —4 ஆம் பக்கம் பார்க்க

ஆசிரியர் ஜூன் மாதச் சம்பளம் அமைச்சு அனுப்பிவைத்தது

ஜூன் மாதத்திற்குரிய ஆசிரியர்களின் சம்பளத்தையும் இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கான சம்பள முற்பணத்தையும் வழங்குவதற்கான மொத்தப் பணத்தொகையை யாழ். அரசாங்க அதிபர் ஊடாக கல்வியமைச்சு அனுப்பி வைத்துள்ளது.

கல்வியமைச்சு இத்தகவலை இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்திற்கு தெரிவித்ததாக சங்கத்தின் பொதுச் —04 ஆம் பக்கம் பார்க்க

அம்பாறையில் நேரடி மோதல் பொறுப்பாளர் றீகன் வீரமரணம்

அம்பாறை மாவட்டத்தில் உள்ள 35ஆம் கிராமம் மினி முகாமில் இருந்து வெளியேறிய ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் பாலையடி வெட்டையில் வைத்து கடுந் தாக்குதலை மேற்கொண்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது,

இந்த நேரடி மோதலின் போது விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் லெப்டினன் கேர்னல் றீகன் வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர்.

45 நிமிடத்திற்கும் மேலாக இடம்பெற்ற இத்தாக்குதலில் சிங்கள இராணுவத்தின் உயர் அதிகாரி ஒருவர் பலியாகினார். மேலும் ஒருவர் படுகாயமடைந்தார்.

17ஆம் திகதி அதிகாலை —04 ஆம் பக்கம் பார்க்க

தரமற்ற மருந்துவகைகள் நோய்கள் பரவும் அபாயம்

யாழ். குடாநாட்டில் விற்பனையாகும் பல உணவுப் பொருட்கள், மருந்துவகைகள் போன்றவை தரம்குறைந்தவைகளாக உள்ளதால் நோய்கள் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

பல மருந்துகள் காலம் தாழ்த்தி விற்கப்படுவதாகவும் குளிரூட்டிகளில் பாதுகாக்கப்படாது விற்கப்படுவதாகவும் இதனால் நோய்கள் கட்டுப்படுத்தப்படாதுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

— 04 ஆம் பக்கம் பார்க்க

கொக்காவில் அழிப்பு: 'இவர்கள்' விழிபபு என அறிவிப்பு

கொக்காவில் இராணுவ முகாமை விடுதலைப் புலிகள் தாக்கி அழித்ததைப் போன்று மாங்குளம் இராணுவ முகாமையும் தாக்க முற்பட்டு வருவதனாலேயே இப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகள் அதிகரிக்கப் பட்டுள்ளதாக கொழும்பில் இராணுவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் இராணுவத்தின் தொகையை அதிகரிப்பதற்காகவிழக்கில் இருந்துபடைகளை தருவிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக அல்வதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (து.ஸ்ரீ)

ஆசிரியர் வேதனம்; வேதனை தவிர்க்க நடவடிக்கை

வடக்கு, கிழக்கு பகுதிகளில் இடம்பெயர்ந்துள்ள ஆசிரியர்கள் எந்த மாவட்டத்திற்கு இடம் மாறியுள்ளார்களோ அந்த மாவட்ட கல்விப்பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு ஜூன் மாத சம்பளத்தை பெறலாம் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளதாக

— 04 ஆம் பகம் பார்க்க

மாவும், சீனியும் இன மானம் காக்காது

பெண் மீதுமா உன் வஞ்சினம்?

கடந்த பல நாட்களாக திருமலை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா ராணுவத்தினர் பலரை தொடர்ந்து கொலை செய்து கைது செய்து வருவதாக விடுதலைப்புலிகள் தெரிவிக்கின்றனர்.

12-ம் திகதி சீனன் குடாவில் குருசாமி துரைரத்தினம், அழகையா, ஆனந்தன்,செல்ரன் கந்தையா, அந்தோனி சிவராஜா, அடக்ளஸ்ஆகிய ஆறுபேர் கைது செய்யப்பட்டு முகாமுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

13-ம்திகதி சசிஎன்னும்இளம் பெண் ஒருத்தியை இதே பகுயில் வைத்து சிங்கள ஊர்காவற் படையினர் கடுமையாகத் தாக்கியுள்ளனர்.

14 ம் திகதி கப்பல் துறைக்

— 04 ஆம் பக்கம் பார்க்க

கரும்புலிகளின் உணர்வொன்றே விடுதலையின் எழுச்சி - யோகி

(கல்வியங்காடு)

" சிங்கள தேசம் வேறு தமிழ்த் தேசம் வேறு" இரண்டும் என்றுமே ஒன்றாக முடியாது. எமக்கென்று ஒரு காவற் படை வேண்டும். எம் எமது பாதுகாப்பை நாமே பலப்படுத்த வேண்டும். கப்டன்,மில்லர், வரிசையில் கரும் புலிகள் மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகியோர் சரித்திரம் படைத்துள்ளார்கள். இவர்களின் தியாகம் வரலாற்றில் பொறிக்கப்பட வேண்டியது. இவர்கள் வீரம்செறிந்தவர்கள் மட்டுமல்ல தலைவர் மீது நிறைந்த பாசம் கொண்டவர்கள். நாங்கள் காட்டிலே இருந்தபோது சில வேளைகளில் உணவு, உறக்கம் கூட இன்றி எதிரிப்படையோடு உக்கிரமான சண்டையிட்டு அவர்களைப் பின்னடையச் செய்தவர்கள். வீர மரணத்தை சந்திப்பதற்கு சற்று முன்னர் கூட சாவின் நேரத்தைத் தெரிந்த பின்னரும் மிகவும் கலகலப்பாகவும் மகிழ்ச்சியோடும்பேசிக்கொண்டிருந்தவர்கள்"

மேற்கண்டவாறு கடலில் சாவை சாதனையாக்கி சரித்திரம் படைத்த மூன்று கரும் புலிகளுக்கு நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி செயலாளர் நாயகம் திரு யோகரத்தினம் (யோகி) தெரிவித்தார்.

—4ஆம் பக்கம் பார்க்க

மாங்குளத்தில் குண்டு வீச்சு

நேற்று மதியம் தொடங்கி மாலை வரை மாங்குளம் முகாமைச்சுற்றியுள்ள பகுதிகளில் ஸ்ரீலங்கா விமானப் படையினர் பாரியகுண்டு வீச்சுத்தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலில் [illegible] றோ' விமானமும் 4 ஹெலிகளும் 3 பொம்மர்களும் ஈடுபட்டிருந்தன. குண்டு வீச்சுத் தாக்குதல் ஒரு புறம் இடம் பெற ஹெலிகள் முகாமுள் இறங்க முயற்சி செய்ததாகவும் [illegible]

இந்திய அரசு குற்றச்சாட்டு

தமிழக மீனவர் மீது இல. கடற்படை தாக்குதல்

தமிழக மீனவரை இலங்கை கடற்படையினர் தாக்கும் சம்பவங்கள் மீண்டும் அதிகரித்துள்ளதாக இந்திய அரசு குற்றம்சாட்டியுள்ளது.

நேற்று முன்தினம் காலை தமிழகக் கரையிலிருந்து மீன் பிடிக்கச் சென்ற இயந்திரப் படகொன்றை வழிமறித்த இலங்கை கடற்படையினர் படகிலிருந்த தமிழக மீனவர்களை பலமாகத்தாக்கிய தாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அந்தப்படகிலிருந்த மீன்கள், மீன்பிடி உபகரணங்கள் என்பவற்றைப் பறித்தெடுத்த கடற்படையினர் படகையும் மோதி சேதப்படுத்தியதாகவும் புகார் செய்யப்பட்டுள்ளது.

மற்றொரு சம்பவத்தில் காணாமல்போன மீனவரைத் தேடிச்சென்ற இரு இராமேஸ்வரம் மீன்பிடி வள்ளங்களை கடற்படையினர் கைப்பற்றி இலங்கைக் கரைக்கு கொண்டு வந்ததாகவும், இங்குவைத்து அந்த இரு படகிலிருந்த மீனவர்கள் பலமாகத் தாக்கப்பட்டு படகிலிருந்த உபகரணங்கள் அபகரிக்கப் பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளை கடந்த பன்னிரெண்டாம் திகதி மீன் பிடிக்க கடலுக்குச் சென்ற ஐந்து மீனவர்கள் இன்னும் கரை திரும்பவில்லையெனவும் இலங்கை கடற்படையினால் இவர்களுக்கு ஆபத்து ஏற்பட்டிருக்லாமெனவும் தெரிவிக்கப்படுகின்றது.

தமிழக மீனவர் மீது தொடரும் தாக்குதல்களை அடுத்து கடலுக்குள் இறங்கி தொழில் செய்ய மீனவர்கள் அஞ்சுவதாக தமிழக அரசிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கி)

திருத்தவேலை முடிவுற்றது

யாழ். நகர் பகுதிக்கான நீர் விநியோகக் குழாய் திருத்த வேலைகள் முடிவடைந்துள்ளன. இதற்கான பரீட்சார்த்த நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டாலே தொடர்ச்சியான விநியோகத்தைப் பற்றிய முடிவு எடுக்க முடியும் என மாநகரசபை வேலைப்பகுதி தெரிவித்துள்ளதாக யாழ். மாநகர ஆணையாளர் தெரிவித்தார். (64 கி)

முகாம்களுக்கு நீர் விநியோகம்

தற்சமயம் யாழ்ப்பாண மாநகரசபையால் கொழும்புத்துறை துரையப்பா மகாவித்தியாலயம், கொழும்புத்துறை சூசையப்பர் மகாவித்தியாலயம், பாண்டியன் தாழ்வுசந்தனமாதா கோவில், சென். பற்றிக்ஸ் கல்லூரி, பாஷையூர் மகாவித்தியாலயம் ஆகிய அகதி முகாம்களுக்குத் தேவையான குடிநீர் மிகவும் கட்டுப்பாடான முறையில்எரிபொருள் தட்டுப்பாடானநிலைமையிலும்திருப்திகரமாகவழங்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அகதி முகாம்கள் தவிர்ந்த மாநகர எல்லைக்குள் வேறு இடங்களில் அமைந்துள்ள அகதி முகாம்களுக்கு குடிநீர் வசதி தேவைப்படின் யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற அலுவலகத்தில் இயங்கி வரும் கருமபீடத்துடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (கி)

போராளிகளுக்கு ஆசிவேண்டி தீவுப்பகுதியில் விசேட வழிபாடு

தற்போது ஸ்ரீலங்கா படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகளுக்கு மிடையே நடைபெற்றுவரும் யுத்தத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் வெற்றி பெற தேவ ஆசிவேண்டி தீவுப்பகுதிகளில் உள்ள ஆலயங்கள் தோறும் விசேட பூசைகளும் அபிடேகங்களும், பிராரத்தனைகளும் நடைபெற்று வருகின்றன.

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலயம், வேலணை பெருங்குளம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், புளியங்கூடல் மகாமாரி அம்மன் ஆலயம், இலந்தைவனம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் என்பவற்றில் இப் பூசைகள் நடைபெற்று வருகின்றன. (24 கி)

நயினையில் மக்கள் இடம்பெயர்வு; தினம் பீரங்கித் தாக்குதல்

நயினாதீவு கடற்படையினரால் எந்நேரமும் தாக்கப் படலாமென அஞ்சி நயினாதீவுப் பகுதி மக்களில் பலர் இத்தீவிலிருந்து வெளியேறி குறிக்கட்டுவான், புங்குடுதீவு போன்ற வெளிக் கிராமங்களில் தங்கியுள்ளனர்.

இது இவ்விதமிருக்க நயினாதீவு கடலில் இருந்து கடற்படையினர் பீரங்கிப் படகு மூலம் குறிகட்டுவான் பகுதியை நோக்கி பீரங்கித் தாக்குதல்களை மேற் கொண்டு வருகிறார்கள்.

இத்தாக்குதலில் உயிராபத்துக்கள் இதுவரை ஏற்படவில்லையாயினும் சிலருக்கு சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (24கி)

வைத்திய வசதியை ஏற்படுத்த மருத்துவ ஆசிரியர் கோரிக்கை

வடக்கு, கிழக்குப் பகுதியில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்தி, உணவுப் பொருட்களை வழங்கி சுமுகநிலையை ஏற்படுத்த வேண்டும்.

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக மருத்துவபீட ஆசிரியர் சங்கம் ஜனாதிபதி பிரேமதாசாவை கடிதமூலம் கோரியுள்ளது.

தற்பொழுது யாழ். போதனா வைத்தியசாலை மூடப்பட்டுள்ளது. இதனால் பொதுமக்களுக்கான வைத்திய வசதி மறுக்கப்பட்டுள்ளது.

இங்கு சுமுகநிலையை ஏற்படுத்துவதன் மூலம் மக்களின் அடிப்படை வசதிகள் தடையின்றிக் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் என்றும் இக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (9.கி)

யாழ். மாநகர ஊழியர்கள்

அகதிகளுக்கு வழங்க ஒருலட்சம் ரூபா உதவி

யாழ். மாநகர சபை ஊழியர்களினது நலன்புரிச் சங்கத்தினரால் வெளிமாவட்டங்களிலிருந்து வந்த அகதிக் குழந்தைகளுக்கு பாலுணவு, ஜீவகாரம் போன்றவை வழங்கப்பட உள்ளன.

இந் நடவடிக்கைக்காக சுமார் ஒருலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இதற்குப் பொறுப்பாக சுகாதார வைத்திய அதிகாரி திருமதி அ.கதிர்காமர் செயற்படுகிறார்.

இவர் தலைமையிலான குழு 19-ம் திகதி வியாழக்கிழமை முதற் கட்டமாக ஒரு சில முகாம்களில் உதவிப் பொருட்களை விநியோகிக்கும். பின்பு பரவலாக உதவி வழங்கல் மேற்கொள்ளப்படும் எனவும் இதற்கு பாலுணவுப் பொருட்கள் தட்டுப்பாடாக உள்ளமை இடையூறாக உள்ளதாகவும் மாநகர ஆணையாளர் பொ. பாலசிங்கம் தெரிவித்தார். (64 கி)

பஸ்சை விட்டு இறங்கிய பயணிகள் மீது

ஹெலி சூடு; பலர் காயம்

(உடுப்பிட்டி)

வல்லை வெளியில் பொது மக்கள் சென்ற மினிபஸ் மீது ஹெலிகப்டரிலிருந்து தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

கடந்த திங்கள் பிற்பகல் மேற்படி தாக்குதல் நடந்தது. இதனால் பஸ்ஸில் பயணம் செய்த பலர் காயமடைந்தனர்; பஸ்சும் சேதமடைந்தது.

காயமடைந்த அனைவரும் அரசின் கட்டளைப்படி தம்மை இனங்காட்ட பஸ்ஸை விட்டு வெளியே இறங்கி வீதியில் நின்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (39கி)

கலைஞர் கருணாநிதி கவலை

தமிழக மக்களால்- ஈழத் தமிழரைக் காக்க முடியவில்லை

'இலங்கையில் தமிழ் மக்கள் கொல்லப்படும் போது அவர்களைக் காப்பாற்ற முடியாத நிலையில் தமிழக மக்கள் இன்று இருக்கிறார்கள். இந்த நிலை தமிழ் மக்களுக்கு ஏற்பட்டிருப்பது குறித்து நாம் அனைவரும் வெட்கப்பட வேண்டும்.'

இவ்வாறு தமிழக முதல்வர் முத்துவேலு கருணாநிதி தெரிவித்திருக்கிறார்.

1983 ஆம் ஆண்டு முதல் இலங்கையில் தமிழ் மக்கள் சிங்களவர்களால் படுகொலை செய்யப்பட்டு வருகின்றார்கள். தமிழக மக்களால் அவர்களைக் காப்பாற்ற முடியாதுள்ளது வருத்தத்திற் குரியது.

இலங்கைத் தமிழரைக்காப்பாற்ற தமிழக மக்கள் கட்சி வேறுபாடின்றி ஒன்று சேர வேண்டும். இவ்வாறு கலைஞர் கருணாநிதி தெரிவித்திருக்கிறார். (கி)

'தாகம்' செய்யும் வேலை

ஆனையிறவு இராணுவ தடை முகாமுக்கான நீர் விநியோகம் தடுக்கப்பட்டதை அடுத்து நேற்று முன்தினம் முதல் தடைமுகாமூடான போக்கு வரத்தும் தடைப்பட்டுள்ளது.

எங்களுக்குக் குடிப்பதற்கு வரும் நீரை நிறுத்தி விட்டீர்கள். நீங்கள் ஒவ்வொரு வரும் தண்ணீர் கொண்டு வந்தாலே இதற்கு அப்பாற் செல்ல அனுமதிப்போம் என அவர்கள் கூறி வருகின்றார்களாம். (64 கி)

திருமலை இராணுவத்தில் 'ஜிகாத்'

திருமலையில் தேடுதல் நடவடிக்கைகளில் இராணுவத்தினருடன் ஜிகாத் இயக்கத்தினரும் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

திருமலையில் இருந்து யாழ். குடாநாட்டை நோக்கி இடம் பெயர்ந்துள்ள சிலர் இது பற்றிய தகவல்களைத் தெரிவித்தனர்.

திருமலையில் இராணுவத்தில் கடமைபுரியும் ஒரு தமிழ் பேசும் அதிகாரியே ஜிகாத் இயக்கத்தினரை வழிநடாத்தி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (35,கி)

'வலம்புரி' கடற்படைவசம்

நெடுந்தீவு குறிகட்டுவான் கடற்சேவையில் ஈடுபட்டு வந்த 'வலம்புரி' என்னும் பாரியபிரயாணிகள் படகை நயினாதீவு கடற்படையினர் தம்முடன் எடுத்துச் சென்றுள்ளனர்.

தீவக சேவைக்கென அரசாங்கத்தினால் இப்புதிய படகு அண்மையில் வழங்கப் பட்டிருந்தது,

இப்படகுச்சேவை தடைப்பட்டதனால் நெடுந்தீவு பிரயாணிகள் பெரும் கஷ்டத்திற்குள்ளாகியுள்ளனர். (24 கி)

க. பொ. த (உயர்தர)

பரீட்சை அனுமதி அட்டை அடுத்தவாரம் இங்கு வரும்

வடக்கு, கிழக்கு பகுதிகளிலிருந்து கல்விப் பொதுத்தராதரப்பத்திர உயர்தரப்பரீட்சைக்குத் தேற்றவுள்ள பரீட்சார்த்திகளுக்குரிய அனுமதி அட்டைகள் அந்தந்தப்பகுதி கல்விப்பணிப்பாளர்கள் மூலமாக அடுத்தவாரம் அனுப்பி வைக்கப்படும்.

பரீட்சை ஆணையாளர் இத்தகவலைத் தெரிவித்துள்ளார்.

வடக்கு,கிழக்கில் பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பித்தவர்கள் தற்போதைய சூழ் நிலையைக் கருத்தில்கொண்டு அம்மாகாணங்களுக்குள் விரும்பிய இடத்தில் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

வடக்கு கிழக்குக்கு வெளியே பரீட்சை எடுக்க அவர்கள் விரும்பினால் பரீட்சை ஆரம்பமாவதற்கு ஒருகிழமைமக்கு முன்னர் விண்ணப்பிக்க வேண்டும்எனவும்அறிவிக்கப்பட்டது

அடுத்த மாதம் 10 ம் திகதி ஆரம்பமாகவுள்ள உயர்தரப் பரீட்சைக்கு ஒருலட்சத்து நாற்பத்திஎழாயிரம் பேர் தோற்றவுள்ளனர் அவர்களில் இருபத்து மூவாயிரம்பேர் வடக்கு கிழக்குப்பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (கி)

சங்கக்கடைகளைப்பாதுகாக்க தொண்டர்கள் சேவை

(கோப்பாய்)

வலிகிழக்குத் தென்பகுதிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் சகல கிளைகளிலும் இதுவரை பங்கீட்டு அட்டைக்கு வழங்கப்பட்டு வந்த பொருள்கள் இனி குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கைக்கேற்ப வழங்கப்படவுள்ளது.

இதனால் குறைந்த, கூடிய அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்களிடையே பொருள்கள் வழங்குவதில் உள்ள பாரபட்சம் நீக்கப்படவுள்ளது.

அத்துடன் இக்கிளைகளைப் பாதுகாக்கும் பொறுப்பும் அப்பகுதிப் பொதுமக்களிடமே வழங்கப்பட்டுள்ளது. கிளையின் காவலாளியுடன் சுழற்சி அடிப்படையில் தினமும் பொதுமக்களில் இருவருமாகப் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுவர். இதற்கான ஒழுங்குகளை தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுசரணையுடன் கிளைக்குழுக்கள் மேற்கொண்டு வருகின்றன. (23கி)

சுமங்கலி பூஜை

சாவகச்சேரி அருள்மிகு துர்க்கை அம்பாள் தேவஸ்தானத்தில் மாதரசிகள் பால் கொள்ளும் மங்கள தீபபூஜை 25-ம் திகதி புதன்கிழமை ஆடிப்பூரத் திருநாளன்று இடம்பெறவுள்ளது.

காலை 8 மணிக்கு அம்மனுக்கு அஷ்டோத்தர சத கலாபிஷேகமும், பிற்பகல் 3 மணிக்கு மாதரசிகள் பங்கு பற்றும் சுமங்கலி தீபலக்ஷ்மி பூஜையும் இடம்பெறும்.

இடமாற்றம்

எமது அன்புக்குரிய தமிழீழ மக்களே!

வாடிக்கையாளரின் நன்மையைக் கருத்திற் கொண்டு எமது புத்தகசாலைகளை ஒட்டுமடம் சந்திக்கு அண்மையில் செபஸ்ரியார் வீதியில் 582/64ல் அமைத்துள்ளோம் என்பதை அன்புடன் அறியத்தருகிறோம்.

மக்மிலன் புத்தகசாலை - ஸ்ரீகாந் புத்தகசாலை

582/64, செபஸ்ரியார் வீதி, (ஒட்டுமடம் சந்திக்கு அருகாமையில்)

யாழ்ப்பாணம் 07023

"நாடு நிரந்தரமாகப் பிளவுபடப் போகிறது!"
"பௌத்த சிங்கள பேரினவாதம்- தமிழின சங்காரம்!"

- ஜனாதிபதிக்கு ஈ. ஜ. மு கடிதம்

நாடு பிளவுபடும்

பொறுப்புள்ள பதவி வகிப்பவர்களது அறைகூவல் ஒரு புறமும், மிக வேகமாக உக்கிரமடைந்துவரும் போர் மறுபுறமும் விளைவிக்கக்கூடிய பேரழிவையும், நாடு தவிர்க்க முடியாதபடி நிரந்தரமாகப் பிளவுபடப் போவதையும் அவதானித்து ஆழ்ந்த கவலை அடைகிறோம்."

இவ்வாறு ஈழவர் ஜனநாயக முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர் கி. பரராஜசிங்கம் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

கடிதத்தில் 'பரா' மேலும் எழுதியுள்ளதாவது.

'வடகிழக்கில் வாழும் தமிழ் மக்களுடைய உணர்வுகளைத் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருவதன்மூலம் சரியான முடிவுகளை எடுத்து அமைதியையும்சகஜநிலையையும் தாமதமின்றி ஏற்படுத்த தங்களுக்குஉதவமுடியும்என்ற நம்பிக்கையிலே இதை எழுதுகிறோம்.

நியாயப்படுத்த முடியாது

ஸ்ரீலங்கா படைகள் மேற்கொண்டு வரும் ராணுவ நடவடிக்கைகள் தமிழ்மக்களுக்குப் பேரிழப்பையும் துயரையும் விளைவிக்கின்றன.

ஆயிரக்கணக்கான அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டும், லட்சக்கணக்கானோர் வீடுகளை இழந்தும், பலகோடி ரூபா பெறுமதியான பொருள்கள் நாசமாகியும் உள்ளன. கண்மூடித்தனமாகப் பொதுமக்கள் கொல்லப்படுவதற்கும், குடிமக்கள் வாழும் ராணுவமுக்கியத்துவமற்ற பகுதிகள் குண்டு வீச்சுக்கும், ஷெல்லடிக்கும், எரிகுண்டுத்தாக்குதலுக்கும், கடற்படையின் பீரங்கிப் படகுத் தாக்குதலுக்கும் உள்ளாவதை எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாது.

தமிழ்மக்கள் ஆத்திரம்

அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்ட இவற்றினால் தமிழ் மக்கள் ஆத்திரமடைந்துள்ளார்கள், சிங்களப் படை வீரர்கள் ஏன் தொடர்ந்தும் தங்கள் மத்தியில் முகாமிட்டிருக்க வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். தமிழர் தாயகத்தில் நிலைகொண்டுள்ள இப்படைகள் தமிழர் மீதான சிங்கள ஆதிக்கத்தின் சின்னங்களாகவே கருதப்படுகின்றன.

அரசே பொறுப்பு

ஒரு வருடத்துக்கு மேலாக விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியும் அமைதியானதோர் அரசியற் தீர்வு காண எதையும் சாதிக்காத ஓர் அரசாங்கம், தன் பங்கை பொறுப்பை ஏற்காது யார் சண்டையைத் தொடங்கினார்கள் என்ற ஆராய்ச்சியில் இறங்குவது வெற்றாரவாரமாகவே தொனிக்கிறது.

குரல்வளையை நெரிக்கிறது

1990 ஜூன் 11-ம் திகதி மோதல்தொடங்கியதிலிருந்து அரசாங்கம் தனது படைகளின் துணைகொண்டு வடகிழக்கை நாட்டின் ஏனைய பகுதிகளிலிருந்து துண்டித்துவிட்டது. தமிழ்ப்பகுதிகளுக்குரிய அத்தியாவசிய உணவும், மருந்துகளும், எரிபொருளும் பிறவும் அதற்கிலிருந்தே வர வேண்டியிருக்க, அரசாங்கம் எடுத்துவரும் நடவடிக்கையானது இன அடிப்படையில், தமிழர் குரல்வளையை நெரிப்பதாகவே முடிந்துள்ளது.

தமிழ்ப் பிரதேசங்களிலுள்ள விமான நிலையங்களையும் துறைமுகங்களையும் அரசு தன் படைகளின் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால், வெளிநாடு போவோரும் வர்த்தகர்களும் கொழும்புக்குப் போகவேண்டியுள்ளது. இந்நிலையில் மக்கள் என்ன செய்ய வேண்டும் என அரசு எதிர்பார்க்கிறது.

பொய்ப் பிரசாரம்

குரோதத்தோடும் பழிவாங்கும் நோக்கத்தோடும் இவ்வாறு தடைகளைப் போட்டுக்கொண்டு தன் தவறுகளை மூடி மறைத்து சர்வதேச சமூகத்தின் கண்களில் மண்ணைத்தூவ அரசாங்கம் பொய்யான அறிக்கைகளைப் புனைகிறது. பள்ளிச் சிறாரின் மதிய உணவுப் பணத்தைப் போர்நிதிக்கு மாற்றுவதும், அரசின் ராணுவ முயற்சிகளுக்குத் தெய்வ ஆசி வேண்டுவதும் தேசிய பாதுகாப்பு நிதிக்குப் பணந்திரட்டுவதும் எல்லாம் இனவாதத் தீயைக் கொழுந்துவிட்டெரியச் செய்யும் முயற்சிகளே,

தமிழருக்கெதிரான போர்

எங்கோ ஒரு குக்கிராமத்தில் உள்ள சிங்கள மாணவனுக்குத் திடீரென்று தேசபக்தி உண்டாகி, 'தமிழருக்கெதிரான போருக்கு' தன் பகல் உணவையே தியாகம் செய்கிறான். முன்பு 'சூடு கண்ட' ஓர் அரசாங்கக் கட்சி அரசியல்வாதியை, தன்னுடைய உண்ணாநோன்பு கைதூக்கி விடப் போகிறது என்பதை பாவம் அச்சிறுவன் அறிந்திருக்க நியாயமில்லை.

தமிழர்களுக்கெதிராக இழைக்கப்பட்டுள்ள அட்டூழியங்கள் அவர்களைப் பலவீனப்படுத்துவதற்குப் பதில், அடக்கு முறையிலிருந்து தம்மை விடுவிக்க வேண்டும் என்ற உத்வேகத்தை அவர்கள் நெஞ்சில் ஏற்படுத்தியுள்ளது.

பௌத்த சிங்கள அரசு

இத்தீவில் வாழும் சிங்களவர் அல்லாத பௌத்தரல்லாத சமூகங்களின் அபிலாஷைகள் நலன்களை அறவே ஒதுக்குமளவுக்கு - உதாசீனம் செய்யும் அளவுக்கு- அரசு பௌத்த விவகாரங்களில் அளவுக்குமீறி ஈடுபட்டு வந்துள்ளது. இதில் காணப்படுவது மத்தியகால சிவில் நிர்வாகப் போக்கேயொழிய ஒரு நவீன அரசயந்திரத்தின் சாயலல்ல.

இங்கிலாந்தின் அரசமத காவலரான மகாராணி தம் நாட்டின் பாராளுமன்ற விவகாரங்களின் தலையீட்டால் என்ன நடக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்; பதவியில் இருக்கும் அரசு அவர் முகத்தில் அறையுமாப் போல நடந்து கொள்ளும். ஆனால் ஸ்ரீலங்காவிற் காண்பதென்ன? அரச வைபவங்களிலும் மாநாடுகளிலும் பௌத்த மதபீடம் அதிகாரபூர்வமாகப் பிரசன்னமாகிறது; அரசியற் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள் பௌத்த துறவிகளுக்கு அஞ்சி நடுங்குகிறார்கள்! அரசு மேற்கொள்ளும் எந்த முக்கிய முடிவுக்கும் அவர்கள் அனுமதி தேவைப்படுகிறது.

இந்த அதிதீவிர பௌத்தவாதம், தற்போது, தமிழின சங்காரத்திலும் மூர்த்தண்யமான அடக்கு முறையிலும் வந்து நிற்கிறது. இந்நிலையில், ஸ்ரீலங்காவின் மதச்சார்பை இங்கிலாந்தின் மதச்சார்போடு ஒப்பிடுவது வேடிக்கையாக இல்லையா? இங்கிலாந்தின் பிரதமமந்திரி கிறிஸ்தவ சமயத்துக்கு முண்டு கொடுத்தபடி திக்விஜயம் செய்வதுண்டா? அவருக்குப் பல முக்கிய பணிகள் உள. ஏனைய துறைகளில் அவர் ஆற்றும் பணிகளே அவரைப்பதவியில்வைத்திருக்கப்போதுமானவை.

புலிகளின் பின்னால் தமிழர்

வடகிழக்கில் வாழும் தமிழரில் மிகப் பெரும்பான்மையினர் புலிகளை விடுதலைப் போராளிகளாக ஏற்றுக் கொண்டு அவர்கள் பின்னே அணிதிரண்டு நிற்கிறார்கள் என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். வடகிழக்குத் தமிழர்களிடையே வாழாத- அவர்களுக்கு ஆதரவைப் பெறாது, தம்மைத் தமிழர் பிரதிநிதிகளாகக் காட்டிக் கொள்ளும்- தமிழ் அரசியல் வாதிகளோடு கூட்டுச் சேர்ந்து விடுதலைப் புலிகளை ஒடுக்க அரசுஎடுக்கும் முயற்சி, பிரச்சினையைத் தீர்க்க நிச்சயம் உதவப்போவதில்லை.

ஒற்றையாட்சி அமைப்பும்..

ஜனநாயக பாரம்பரியங்களை ஒற்றையாட்சி அமைப்பைக் காப்பது, சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவது, பயங்கரவாதிகளோடு போரிடுவது என்ற சாட்டில் ராணுவ மேலாண்மை பெற அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் எல்லாம் பெரும்பான்மைச் சிங்களவர் சிறுபான்மைத் தமிழரை நசுக்கக்கையாளும் தந்திரோபாயங்களாகவே கருதப்படுகின்றன.

ராணுவ அத்துமீறல்களும்

கடந்த காலத்தில் இடம்பெற்ற ராணுவ அத்துமீறல்களே ஓர் அந்நியப்படை இந்நாட்டுக்குள்வர அடிகோலியது. எனவே, தற்போதைய ராணுவநடவடிக்கைகளை உடனடியாக நிறுத்துமாறும், இனப்பிரச்சனைக்கு நிலையான அரசியற்தீர்வு காணுமுகமாக விடுதலைப்புலிகளோடு பேச்சுவார்த்தைகளை மீளத் தொடங்குமாறும் மேன்மை தங்கிய தங்களை வேண்டுகிறோம்.

அரசியற் தீர்வே மார்க்கம்

நிலைமையை அதன் சகல பரிமாணங்களிலும் ஆராயும் எவருக்கும், தமிழ்பேசும் மக்கள் ஏன் ஒற்றையாட்சி முறையை முற்றாக நிராகரிக்கிறார்கள் என்பதும், அவர்கள் ஏன் சிங்கள அரசியல் வாதிகளையும்கட்டுப்பாடற்ற சிங்களப் படைகளையும் நம்பத் தயாரில்லை என்பதும் தெளிவாகப் புரியும், தற்போதைய தேக்கநிலையிலிருந்து முன்னேற வேண்டுமாயின், ஓர் அரசியற்தீர்வே மார்க்கம் என்பதும், அரசு தன் படை பலத்தில் நம்பிக்கை வைப்பது மலையோடு தலையைமுட்டிக் கொள்வதைப் போன்றது என்பதும், அடிக்கடி படாடோபமான பிரகடனங்களை வெளியிடும் அதே வேளையில், தமிழ் பேசும் மக்கள் மேலும் மேலும் கசப்புணர்வுக்குள்ளாவது, அரசின் நம்பகத்தன்மையைக் குறைத்துவிடும் என்பதும், யதார்த்தத்துக்கு முகம்கொடுக்கும் எவருக்கும் புரியாமல் போகாது. அரசின் ஜனநாயகம், நடைமுறையில், சிங்கள பௌத்தர்களை நாட்டின் ஏனைய இனத்தவரை விட உயரத்தில் கொண்டுபோய் வைக்கிறது.

அதி உத்தமர் அவர்களே, தமிழ்பேசும் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் என்ற வகையில் சமாதானத்துக்காக எடுக்கப்படும் எந்த முயற்சிக்கும் எம்மாலான அனைத்து உதவிகளையும் செய்யக் காத்திருக்கிறோம்.

தமிழர் தாயகத்தின்மீது ஸ்ரீலங்கா அரசு கட்டவிழ்த்துவிட்டுள்ள ராணுவ அட்டூழியங்களை நீயாயப்படுத்த ஒரு பாராளுமன்ற தூதுகுழு புதுடில்லிசென்றுள்ள இந்நிலையில், அரசு தமிழர்களுக்கெதிரான போரில் ஈடுபட்டிருக்கிறதென்று துணிச்சலோடு சாடுகிறது. பெரும்பான்மைத் தமிழர்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியற்கட்சியான ஈழவர் ஜனநாயக முன்னணி.
இக்கடிதத்தின் பிரதிகள் கொழும்பில் உள்ள சகல வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

ஆயுதத் தீர்வா? அரசியற் தீர்வா?

"ராணுவ பலத்தால்
புலிகளை அழித்தல் சாத்தியமில்லை;
அரசியற் தீர்வே விவேகமானது!
—போர்கலை பயின்ற தளபதி மார்கள்
புலம்புகின் றார்கள்!

ஆனால்,

ராணுவப் பயிற்சி ஏதும் பெறாத,
தேர்தல் களத்துக் கேற்ற தந்திரங்கள்
வல்ல அரசியல் வாதிகளோ —
'அட்றெஸ்' இழந்த அம்மையார் உட்பட —
ராணுவத் தீர்வே வழியென முழங்க,

பௌத்த சிங்களப் பேரின வாத
சக்திகள் எல்லாம் ஓரணி திரண்டு
தமிழர் சங்கார நிதி சேகரிக்க,
ஐயகோ,
எங்கே போகிற (து) இந்த நாடு?

—ப. அறிவுடைநம்பி

கடமைக்கு செல்ல வேண்டுகோள்

கிளிநொச்சிப் பிரதேச அரச வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்கள், மருத்துவதாதிமார், சுகாதார சேவை உத்தியோகத்தர்கள், மற்றும் மருத்துவப்பகுதி அனைத்து ஊழியர்களையும் உருத்திரபுரம், முரசுமோட்டைப்பகுதி அரசவைத்திய சாலைகளுக்குக் கடமைகளின் பொருட்டுச் செல்லுமாறு சுகாதாரத் திணைக்கள வடபிராந்தியப் பணிப்பாளர் என், கனகசபை அறிவித்துள்ளார். (34 கி)

முல்லை ஊழியர் கவனத்திற்கு

"தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை முல்லைத்தீவு, ஊழியர்களை 23-ம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு தனது கந்தர்மட இல்லத்திற்கு யூன்,யூலை மாத சம்பள முற்பணம் வழங்கப்படும் ஒழுங்கு, எதிர்கால காரியாலய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காக வருமாறு முல்லை மாவட்ட முகாமையாளர் கே. ரீ. எம். விஜயகுமார் அறிவித்துள்ளார். (கி)

சமாதானம் வேண்டி வழிபாடு

தமிழ் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிக்கெதிராக நீதிகோரியும் அமைதி சமாதானம் நிலவ வேண்டும் என்று கோரியும் விசேட பூசையும் பிராத்தனையும் நாளை வெள்ளிக்கிழமை பி. ப. 4 மணிக்கு ஆனைக்கோட்டை மூத்தனாயனார் கோயிலில் நடைபெறும்.(கி)

ஒத்திவைப்பு

வடக்கு, கிழக்கு நிலைமைகள் சீரானதன் பின்னர் தமிழ் மொழி மூலமான எம். எச். டி பரீட்சைக்குரிய முன் போட்டிப் பரீட்சை நடாத்தப்படும் எனசுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மருத்துவ ஆய்வுகூட தொழில் நுட்பவியலாளர்களுக்குரிய போட்டிப்பரீட்சையில் சித்தியடைபவர்களே எம். எச். டி பரீட்சைக்குத் தோற்றமுடியும். (கி)

தேவை

வில்வம்பழம் விதைக்காகத் தேவைப்படுகிறது.
மில்க்வைற். - யாழ்ப்பாணம். 07025

களம் பல கண்ட கோட்டை

நாளை (20 - 07 - 90) மீண்டும்
ஆரம்பமாகும்

இடம்பெயர்ந்த பயிலுநர்களுக்கு

யாழ். மாவட்டத்துக்கு வெளியிலிருந்துஇடம்பெயந்து வந்து தற்பொழுது யாழ். மாவட்டத்துக்குள் தங்கியிருக்கும் பயிலுநர் ஆசிரியர்கள் அனைவரையும் 22-ம் திகதி ஞாயிறு காலை 11 மணிக்கு பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் ஒன்று கூடுமாறு வடமராட்சி பயிலுநர் ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.

இதே தினத்தன்று, இதே இடத்தில் இடம்பெயர்ந்தோருக்கான நிவாரணம் சேகரித்தல் வழங்குதல் சம்பந்தமான ஆலோசனைக் கூட்டமொன்றும் நடைபெறவுள்ளது. வடமராட்சிக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த சகல பயிலுநர் ஆசிரியர்களும் தங்களால் இயன்ற உடைகளைச் சேகரித்துக் கொண்டு

அனுராதபுரத்தில்

ரூ. 20 லட்சம் செலவில் தனி வார்ட் அமைகிறது

வட,கிழக்குப் போரில் பாதுகாப்புப் படை வீரர் நலன் கருதி அனுராதபுரம் ஆஸ்பத்திரியில் தனியான 'வார்ட்' ஒன்று அமைக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப் படுகிறது.

இவ்வார்டினை அமைக்க இருபதுஇலட்சம் ரூபாசெலவு பிடிக்கும் என்றும் அமெரிக்கா 17 இலட்சம் ரூபாவைத் தந்துதவும் என்றும் நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

ஆயிரம் பௌத்த பிக்குகளும் இதற்கு உதவுவர் என்றும் அமைச்சர் திரு.பிரேமச்சந்திர இதற்கு ஒத்துழைப்பு அரசு அனுசரணையுடன் செய்வார் என்றும் மேலும் அறிவிக்கப்பட்டது.

சிறுவர் கூட பாதுகாப்பு நிதிக்கு உதவுகின்றனர்

வடக்கு . கிழக்குப் பகுதிகளில் தொடர்ந்து நிகழ்ந்து வரும் ஆயுதப் படையினருக்கான தேசிய பாதுகாப்பு நிதிக்கு நாட்டின் பல பாகங்களிலும் இருந்து இலட்சக் கணக்கில் புணம் சேர்வதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

பாடசாலை ஆசிரியர்களும், மாணவர்களும், பௌத்தபிக்குகளும் இந்நிதி சேகரிப்பில் அதி தீவிரம் காட்டிவருவதாகவும் அறியவருகிறது,

சிறுவர் பாடசாலைகளிலும் கூட இதற்கு நிதி சேகரிக்கப் படுவதாகவும் தெரிவிக்கப் பட்டது. (ஸ்ரீ)

மானிப்பாயில் இயங்கும்

யாழ். போதனா வைத்தியசாலை சுகாதார அமைச்சு மௌனம்

யாழ். போதனா வைத்திய சாலையின் தற்போதைய நிலை குறித்து சுகாதார அமைச்சு எவ்வித அக்கறையும் இன்றி செயற்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ் வைத்தியசாலை பல வசதிகள் குறைந்த நீலையில் மானிப்பாயில் இயங்கு கின்றது என பலதடவை சுகாதார அமைச்சிற்கு அறிவிக்கப் பட்டபோதும் இவ்விடயத்தில் மௌனம் சாதித்துவருகின்றதுஎன்றும் பழைய இடத்தில் இவ்வைத்தியசாலையைஇயங்க வைப்பது தொடர்பாக கொழும்பில்நடைபெறும்பேச்சுகளிலும் சுகாதார அமைச்சு அக்கறையின்றி உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (03)

நிரந்தரமாவர்

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஊழியர்கள் விரைவில் நிரந்தரமாக்கப்படுவர் என தெரிவிக்கப்படுகிறது. இவ்வூழியர்கள் கடந்த ஒன்றரை வருடகாலமாக நிரந்தரமாக்கப்படாமை இங்கு குறிப்பிடத்தக்கது.

கரும்புலிகளின்...

நல்லூர் திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் நல்லூர் வர்த்தக சங்கத் தலைவர் திரு. ஆ. மு இராஜகோபால் தலைமையில் இன்று முற்பகல் இக் கூட்டம் நடைபெற்றது. தொடர்ந்து பேசிய திரு. யோகி ''ஒரு நாட்டில் இரண்டு தேசிய படை இருக்க முடியாது. எமக்கு இன்று பொருளாதாரத் தடை,எரிபொருள் தடை, என பல தடைகள் போடப்பட்டுள்ளன. எந்தத் தடைகளைப் போட்டாலும் அவற்றுக்கு எதிரான நாம் எப்படிப் போராடுவது என்று சிந்திக்க வேண்டும் எரிபொருள் இல்லையானால் சீனி இல்லையானால், மா இல்லையானால் அவற்றை நாம் எப்படி சமாளிக்கலாம் என்ற வேறுபட்ட சிந்தனை எமக்கு வேண்டும். உலகிற்கு வழிகாட்டும் உன்னதமான ஒரு நாட்டை நிச்சயம் நாங்கள் அமைத்தே தீருவோம் என்றார்.

விடுதலைப் புலிகள் மகளிர் பிரிவைச் சேர்ந்த செல்வி சித்திரா, பிரமுகர்கள் திரு. க செல்வநாயகம்,திரு.து.ரங்கன் திரு. ப. கணபதிப்பிள்ளை திரு. நல்லை அமிழ்தன் ஆகியோரும் உரையாற்றினார்கள்.திரு.சி.தியாகராசாநன்றி கூறினார். (ஸ்ரீ)

ஈழத்தமிழரின் ...

அநியாயமாகக்கொல்லப்படும் நிலையினை வன்மையாகக் கண்டித்தது.

இச்சம்பாஷனையின் போது பலலோக்தள் எம்.பிக்களும் கலந்துகொண்டனர்.

குறிப்பாக தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதியின் மருமகனும், மத்திய அமைச்சருமான திரு. முரசொலிமாறனும் இதில் கலந்துகொண்டார்.

இலங்கையில் தமிழர்க்கு இழைக்கப்படும் அநீதி அதன் விளைவாக அகதிகளாகப் பெருமளவில் ஈழத்தமிழர் தஞ்சமடையும் நிலை பற்றி திரு. மாறன் எம்.பி கலைஞர் சார்பாகத் தம் நிலையினை இக்குழுவிடம் விரிவாக எடுத்துரைத்தார்.

ஏனைய மாநிலங்களைச் சேர்ந்த அமைச்சர்கள் இவ் வுரையாடலின் போது கலந்து கொண்ட போதிலும் முரசொலி மாறன் எம்.பியின் குரல் சகலரினதும் கவனத்தை ஈர்ப்பதனைக் கவனித்துகொள்ள முடிந்ததாகத்தெரிவிக்கப்படுகிறது.

கவிஞர் கண்ணதாஸன் 'தென்றல்' பத்திரிகை நடத்திய காலத்தில் 'முரசொலி' என்ற இதழினை வெளிக் கொணர்ந்து தமிழகத்தில் தனித்துவம் பேணியவர் மாறன், அத்துடன் இன்று தமிழக மாநிலம் ஆளும் குகன் என்ற வகையில் அவரினது வார்த்தைகள் ஒவ்வொன்றும் அசல் பத்திரிகையாளர் ஆத்மார்ந்த கருத்து என்ற ரீதியிலும் அங்கு தெரிவித்தது எனச் செய்தியாளர்கள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இன்றைய ஈழத்தமிழர் விவகாரத்தில் தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள தாக்கம் மாறன் ரூபத்தில் வெளிப்படுத்தப்பட்டதாகவும் புதுடில்லி வட்டாரங்கள் கருத்துக்கூறின. (ஸ்ரீ)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேட்) லிமிறெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்ஹவீதி, 'லக்ஷ்மி பில்டிங்கில்' உள்ள அச்சகத்தில் 19-7-90 அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

என் மண், என் இனம் என வாழ்ந்திட்ட வீரன் பற்றி...

ஸ்ரீலங்கா இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணத்தைத் தழுவியுள்ள மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் லெப்டினன் கேர்ணல் றீகன் (இராசையா சிற்றம்பலம்) விடுதலைப்புலிகளின் முக்கியமான போராட்ட வீரராவார்.

இவர் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பெரும்பாலான தாக்குதல்களில் ஈடுபட்டவர். வெல்லாவெளியைச் சேர்ந்த லெப். கேர்ணல் றீகன் 26 வயதுடைய இளம் வீரராகும்,

ஆரம்பத்தில் சுளுவாஞ்சிக்குடிப் பகுதிப் பொறுப்பாளராகவும் பின்னர் மட்டக்களப்பு மாவட்டப்பொறுப்பாளராகவும் பணியாற்றிய றீகன் இந்திய அமைதிப் படையினருடனான யுத்தத்தின்போது மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட இராணுவ பொறுப்பாளராக பொறுப்பேற்றார்.

85-ம் 86-ம் ஆண்டுகளில் கொக்கட்டிச்சோலையை விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தபோது சுளுவாஞ்சிக்குடி, வெல்லாவெளி முகாம்களில் இருந்து சிங்கள இராணுவத்தினரை உள்ளே நுழையாதபடி திறம்பட பாதுகாத்தவர்.

மாங்குளம் இராணுவ முகாம் தாக்குதல், கொக்கட்டிச்சோலை, தம்பட்டை ஆகிய பகுதிகளில் இராணுவத்தினரின் பவல் வாகனம் சேதமாக்கப்பட்ட தாக்குதல்களில் முக்கிய பங்காற்றியவர் ஆவார்.

இந்தியப்படையினர் பல தடவை இவரை உயிருடன் கைதுசெய்வதற்காக கடும் முயற்சியில் ஈடுபட்ட போதும் அவர்களால் இவரை கைது செய்யமுடியவில்லை. இலங்கை இராணுவமும் இந்திய இராணுவமும் பலதடவை றீகன் தம்மால் கொலை செய்யப்பட்டதாக பொய்ப் பிரச்சாரம் செய்து பெருமைப்பட்டுக் கொண்டனர்.

இவரது குடும்பத்தினரு உறவினர்களுமாக 27 பேர் 5ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்ரீலங்கா விசேட அதிரடிப் படையினால் வெறித்தனமாக வெட்டிக் கொலை செய்யப் பட்டனர்.

இதில் இவரது குடும்பத்தில் உள்ள அனைவரும் கொல்லப் பட்டனர். இதன் பின்னர் அவரது வீரம் மேலும் உக்கிரமடைந்தது என்று விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்தன. (03ஸ்ரீ)

பெண்...

கடலில் மீன் பிடித்து வந்த 6பேரை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

15-ம் திகதி சிதம்பரநாதன் என்பவரை ஆலங்கேணியில் வைத்து சுட்டுக்கொலை செய்துள்ளனர்.

16-ம் திகதி ஆலங்கேணி அகதி முகாமில் இருந்து செல்லையா ரோமன், சின்னையா கனகசிங்கம், சிவஞானம், கோணமலை செல்லத்தம்பி ஆகிய 4பேரை இராணுவம் கைது செய்துள்ளது.

அதேதினம் ஆலங்கேணியில் வசிக்கும் சீனித்தம்பி கனகசாமி என்பவரை கிண்ணியாவில் வைத்து இராணுவத்தினர் சுட்டுக் கொலை செய்துள்ளனர் எனவும் தகவல் வெளியாகியுள்ளது.

17-ம் திகதி தம்பலகாமம் 13-ம் கட்டையைச் சேர்ந்த பரமகுரு என்பவரை கிண்ணியாவில்வைத்து முஸ்லிம் ஊர்காவற் படையினர் சுட்டுக் கொலை செய்துள்ளனர். தம்பலகாமம் மகாவித்தியாலயத்திலும் ஆலங்குளம் மகாவித்தியாலயத்திலும் ஏராளமான தமிழ் அகதிகள் தங்கியுள்ளனர். இதனது தொகை தினமும் அதிகரித்து வருகின்றதுஎன்று விடுதலைப் புலிகள் மேலும் தெரிவித்தனர். (3ஸ்ரீ)

தட்டுப்பாடு

குடாநாட்டு தபால் சேவைகள் ஆரம்பிக்கப்பட்டதையடுத்து முத்திரைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கொழும்பிலிருந்து இன்று இங்கு வந்துசேரும் தபால் பொதிகளில் முத்திரைகள் அனுப்பப்பட்டிருக்குமென எதிர்பார்ப்பதாக தபால உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (03)

வாகன உரிமையாளருக்கு

நல்லூர்ப் பிதேசத்திற்குட்பட்ட வாகன உரிமையாளர்கள் அனைவரையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில் திவ்ய ஜீவன சங்க (சட்டநாதர் கோவில்) மண்டபத்திற்கு சமுகம் தரும் படி விடுதலைப புலிகள் மக்கள் முன்னணி நல்லூர் பிரதேசப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

அம்பாறையில்...

இதைத் தொடர்ந்து 35ஆம் கட்டை மினி முகாம் விடுதலைப் புலிகளினால் முற்றுகையிடப்பட்டது கடும் நேடி மோதலின் பின்னர்முகாம்விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டது.

முகாமிலிருந்து பலஇராணுவத்தினர் கொலை செய்யப்பட்டதாகவும் ஒரு சில இராணுவத்தினர் தப்பியோடிவிட்டதாகவும் விடுதலைப்புலிகள் தெரிவிக்கின்றனர்.

முகாமில் இருந்து ஆர்.பி.ஜி—1 தொலைத்தொடர்பு சாதனம்—1 போன்ற ஆயுதங்களும் கொல்லப்பட்ட இராணுவத்தினரின் நான்கு சடலங்களும் கைப்பற்றப்பட்டதாகவும் மேலும் தெரிவிக்கின்றனர். (03)

ஆசிரியர்...

செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்,

இடம் பெயர்ந்த ஆசிரியர்களுக்கும், யாழ் மாவட்ட ஆசிரியர்களுக்கும் எப்போது சம்பளம் வழங்குவதென்று இன்று கல்வித் திணைக்களத்தில் நடைபெறும் கலந்துரையாடலில் டிவெடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (03)

தரமற்ற ..

இனிப்புவகைகள், சிற்றுண்டிகள். ஐஸ்கிறீம், ஜுஸ் வகைகளுக்கு சீனிக்குப் பதிலாக சகரின் பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இதுகுறித்து பொதுமக்கள் விழிப்பாக இருக்கும் படியும் கேட்கப்பட்டுள்ளது. (03)

ஆசிரியர் வேதனம்...

தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச்செயலாளர் தெரிவித்துள்ளார்.

இடம் பெயர்ந்துள்ள பல ஆசிரியர்கள் தமது கஷ்ட நிலையில் கூட சம்பளம் பெற முடியாதுள்ளனர். மேற்படி அறிவிப்புக்கான துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (03ஸ்ரீ

மாங்குளத்தில்...

தலைப் புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டதாகவும்,விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இத்தாக்குதலின் போது விடுதலைப் புலிகள் தரப்பில் ஜலீர்(சமளம் குளம்) வீரமரணமடைந்தார்.

நேற்று முன் தினம் இடம் பெற்ற தாக்குதலில் காயமடைந்த இராணுவத்தினரை ஏற்றுவதற்காகவே மேற்படி தாக்குதல் இடம் பெற்றதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (03ஸ்ரீ)

புலிகள் ..

தெரிவிக்கின்றனர்.

இராணுவத்தினரிடம் இருந்து ஒரு ரீ 56 I, ஒரு ரீ-81 II, 16 ஏ.கே. மகஸின், ஒரு ஆர். பி. ஜி இரு ஷெல்கள், ஒரு 82 எம்ஸ்ரென் மோட்டர், 3000 ஐ. எம் ரவைகள் இரு குண்டு துளைக்காத கவசங்கள் என்பன கைப்பற்றப் பட்டதாக அச்செய்திக் குறிப்பு மேலும் தெரிவிக்கின்றது. (03ஸ்ரீ)

காலமானார்

மயில்வாகனம் பொன்னாச்சிப்பிள்ளை

மேல் கரவை மயில்வாகனம் பொன்னாச்சிப்பிள்ளை அவர்கள் சிவபதமெய்தினார். அன்னார் காலஞ்சென்ற இளைப்பாறிய ஆசிரியர் முருகேசு மயில்வாகனம் அவர்களின் அன்பு மனைவியும், வைத்திய கலாநிதி முருகேசபிள்ளை (கல்முனை), திரு. சிவராசா (ஆளுனர் நாயகம், முரசொலி) திருமதி அன்னலட்சுமி குகதாசன், செல்வி சரஸ்வதிதேவி, திருமதி மகேஸ்வரி நடராசா (சவுதி) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி புஷ்பாஞ்சலி முருகேசபிள்ளை, திருமதி பாலாம்பிகை சிவராசா, திரு. க. சி. குகதாசன் (அதிபர், யாழ் / இந்துக்கல்லூரி), திரு. சி நடராசா (சவுதி - பிரித்தானிய வங்கி சவுதி அரேபியா) ஆகியோரின் அன்பு மாமியும் ஆவர். அன்னாரின் பூதவுடல் கலட்டி ,கரவெட்டி மேற்கிலுள்ள அவர்களது இல்லத்திலிருந்து இன்று (வியாழக்கிழமை) பகல் 10 மணியளவில் தகனக்கிரிகைக்காக இந்து குடும்ப மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் இவ்வறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலட்டி, கரவெட்டி மேற்கு, கரவெட்டி.

பிள்ளைகள்

07026